**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திருமதி. M.S. வரலட்சுமி, பி.ஏ., பி.எல்.,**

**முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 11ம் நாள் திங்கள்கிழமை**

**IA.624/2025**

**in**

**OS.249/2014**

**(CNR.NO.TNVP02-001204-2014)**

1. தம்பிதுரை
2. ராதாகிருஷ்ணன்
3. வளர்மதி
4. கமளம்
5. பத்மாவதி
6. மகாதேவன்
7. மகாதேவி
8. மகாலட்சுமி
9. மலர்கொடி
10. ரகுராமன் .... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

1. பாலாம்பாள் (இறந்தார்)
2. தனலட்சுமி
3. தயாநிதி .... எதிர்மனுதாரர்/வாதிகள்

**IA.625/2025**
**in**
**OS.249/2014**

1. தம்பிதுரை
2. ராதாகிருஷ்ணன்
3. வளர்மதி
4. கமளம்
5. பத்மாவதி
6. மகாதேவன்
7. மகாதேவி
8. மகாலட்சுமி
9. மலர்கொடி
10. ரகுராமன் .... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

1. பாலாம்பாள் (இறந்தார்)
2. தனலட்சுமி
3. தயாநிதி .... எதிர்மனுதாரர்/வாதிகள்

இம்மனுக்கள் 27.10.2025 அன்று தாக்கல் செய்யப்பட்டு 29.10.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 04.11.2025 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ஸ்ரீநிவாசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.S.ஜெயசுதா அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

**IA.624/2025**

மனுதாரர்கள்/2ம் பிரதிவாதியால் இம்மனு சி.பி.சி. பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அதில் மனுதாரர்/2ம் எதிர்மனுதாரர் தரப்பு 6ம் பிரதிவாதி விசாரணையை மீண்டும் திறப்பு செய்து (Reopen) உத்தரவிட வேண்டி பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது.

**IA.625/2025**

மனுதாரர்/2ம் பிரதிவாதியால் இம்மனு சி.பி.சி. ஆர்டர் 18 விதி 17 சி.பி.சி-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அதில் 2ம் மனுதாரர் தாக்கல் செய்யும் மனுவை ஏற்று 16.10.2025 அன்று குறுக்கு விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ள வழக்கை 6ம் பிரதிவாதியை Recall செய்து 2ம் மனுதாரர் தரப்பு விசாரணைக்கு உத்தரவிட பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது.

**<u>2. ஐ.ஏ.624/2025 மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம் பின்வருமாறு :-</u>**

மனுதாரர் தரப்பில் மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி என்றும் வாதிகள் அவர்களுக்கு எதிராக சமூகம் நீதிமன்றத்தில் பாக வழக்கு கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் மேற்படி வழக்கில் கடந்த 16.10.2025 தேதியில் பிரதிவாதிகள் தரப்பில் 6ம் பிரதிவாதி மகாதேவனை குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா வைக்கபட்டிருந்தது என்றும் அன்றைய தினம் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் விருதாச்சலம் I கோர்ட்டில் அரசு சாட்சிகளை விசாரிக்க வேண்டிய இருந்ததால் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக இயலாமல் போனது என்றும் இதன் காரணமாக மனுதாரர் தரப்பு சாட்சியத்தை முடித்துவைக்கப்பட்டு

உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மேற்படி இன்று தாக்கல் செய்யும் இந்த மனுவினை ஏற்று மனுதாரர் தரப்பில் முடித்து வைக்கப்பட்டுள்ள விசாரணையை மீணடும் (Reopen) செய்ய வேண்டியது அவசியமாகிறது என்றும் எனவே சமூகம் கோர்ட்டார் அவர்கள் தயவு கூர்ந்து மேலே கண்டுள்ள காரணங்களை அனுசரித்துக்கொண்டு மனுதாரர் தரப்பு 6ம் பிரதிவாதி விசாரணையை மீண்டும் திறப்பு செய்து (Reopen) உத்தரவிட வேண்டியது நியாயமும் அவசியமும் ஆகிறது என்றும் இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் சம்பவிக்கும் என்றும் மனு மற்றும் அபிடவிட்டில் கூறப்பட்டுள்ளது.

**<u>3. ஐ.ஏ.625/2025 மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம் பின்வருமாறு :-</u>**

மனுதாரர் தரப்பில் மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி என்றும் வாதிகள் அவர்களுக்கு எதிராக சமூகம் நீதிமன்றத்தில் பாக வழக்கு கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் மேற்படி வழக்கில் கடந்த 16.10.2025 தேதியில் பிரதிவாதிகள் தரப்பில் 6ம் பிரதிவாதி மகாதேவனை குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா வைக்கபட்டிருந்தது என்றும் அன்றைய தினம் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் விருதாச்சலம் I கோர்ட்டில் அரசு சாட்சிகளை விசாரிக்க வேண்டிய இருந்ததால் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக இயலாமல் போனது என்றும் இதன் காரணமாக மனுதாரர் தரப்பு சாட்சியத்தை முடித்துவைக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மீண்டும் மனுதாரர் தரப்பு வழக்கை (Recall) செய்து, மனுதாரர் தரப்பில் சாட்சியம் விசாரிக்க அனுமதி அளிக்க வேண்டியது அவசியமாகும் என்றும் ஆகையால் சமூகம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து, மனுதாரர் தாக்கல் செய்யும் மனுவை ஏற்று வழக்கை recall செய்து, தன் தரப்பு 6ம் பிரதிவாதி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் இல்லையேல்

தனக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் சம்பவிக்கும் என்றும் மனு மற்றும் அபிடவிட்டில் கூறப்பட்டுள்ளது.

**4. ஐ.ஏ.624/2025 மனு ஆட்சேபணையின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனுதாரர்/2ம் வாதி தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் சட்டப்படி இந்த மனு தள்ளுபடி செய்ய அருகதையானதாகும் என்றும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரிகை மற்றும் மனு அம்சங்கள் தாக்கல் செய்துள்ள வகையில் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் இந்த அசல் வழக்கு 2ம் பிரதிவாதி/ராதாகிருஷ்ணன் தாக்கல் செய்துள்ள மனுவில் 1ம் பிரதிவாதி தம்பிதுரை மற்றும் 3 முதல் 10 பிரதிவாதிகளை மனுதாரர்களாக காண்பித்து அசல் வழக்கு 1 முதல் 3 வாதிகளை எதிர்மனுதாரர்கள் ஆக காண்பித்து இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும் ஆனால் 2ம் பிரதிவாதி ராதாகிருஷ்ணன் 6ம் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்யவேண்டுமென்று பரிகாரம் கோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும் இந்த அசல் வழக்கானது ஒரு பாக வழக்காகும் என்றும் தாவா சொத்துக்கள் யாவும், அங்கப்பன் - 1, நாராயணன் - 2, தனபால் - 3 ஆகியோர்கள் அடங்கிய இந்து கூட்டு குடும்பத்திற்கு பாத்தியமாகும் என்றும் மேற்படி அசல் வழக்கில் நாராயணன் வாரிசுகளான 1 முதல் 2 வாதிகளும் தனபால் வாரிசுகளான 3ம் வாதியும், சேர்ந்து தங்களுக்கு தாவா சொத்துக்களில் 2/3 பாக உரிமை கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் அதேபோல் அங்கப்பன் வாரிசுகள் தான் தம்பிதுரையும், இந்த மனுதாரர் ராதாகிருஷ்ணனும் இந்த 6 முதல் 9 பிரதிவாதிகளின் தாயார் பாக்கியவதியும் வாரிசுகள் என்ற முறையில் 1/3 பாகத்தினை அடைய உரிமை உடையவர்கள் என்றும் இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டு அதன்

பிறகு 1ம் பிரதிவாதி தம்பிதுரை பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆக விசாரிக்கப்பட்டு இந்த வழக்கு 6ம் பிரதிவாதியான மகாதேவன் பிரதிவாதிகள் தரப்பு சாட்சி 2 ஆகவும், விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும் மனுதாரர்/2ம் பிரதிவாதி சாட்சி 1ஐ குறுக்கு விசாரணை ஏதும் செய்யவில்லை என்றும் ஆனால் 6ம் பிரதிவாதியான பி.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும் மேற்படி பி.சா.2 சாட்சி தரப்பில் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் ஒரு பாக வழக்கில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் பாக உரிமை உடையவர்கள் என்றும் அனைவரும் வாதிகளாகவே கருதப்பட வேண்டும் என்பது தான் சட்டம், இந்த மனுதாரர்/2ம் பிரதிவாதி தன் குமாரர் ரகுராமன் அவர்களுக்கு 06.01.2014ம் தேதியில் ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்து அவரை தூண்டிவிட்டு மேற்படி ரகுராமன் வாதியாக இருந்து ஒ.எஸ்.304/2014 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும் இந்த வழக்கில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு இரு தரப்பிலும் வாதுரை செய்ய 16.10.2025ம் தேதி 17.10.2025ம் தேதி, 27.10.2025ம் தேதி மற்றும் 28.10.2025 ஆகிய தேதிகளில் வாய்தா வைக்கப்பட்டிருந்தது என்றும் ஆனால் இந்த மனுதாரர் 28.10.2025ம் தேதியில் தான் பி.சா.2 சாட்சியான இந்த 6ம் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்றும், மேற்படி பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை Reopen செய்ய வேண்டுமென்றும், பி.சா.2 சாட்சியான மகாதேவன் அவர்களை குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று ஒரு Recall மனுவும் தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி 2ம் பிரதிவாதி மனுதாரராக இருந்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல என்று சென்னை உயர்நீதிமன்றம் நீதியரசர் ராஜேஸ்வரன் அவர்கள் 25.03.2009-ம் தேதியிட்ட கீழ்கண்ட R. Kalairasan Vs. 1. M.Lingam and 5 others என்ற வழக்கில் பாரா 16ல் கீழ்கண்டவாறு

தீர்ப்பு செய்துள்ளார்கள் என்றும் " When the suit was posted for the arguments of the respondents/defendants, instead of arguing the matters, matter was adjourned on several occasions by filing a number of adjournment petitioners - There was no representation on behalf of the respondents/defendants and therefore the suit was posted for judgment - It was only at time the respondents/defendants suddenly realised that P.W.1 has not been effectively cross examined - This is definitely for the purpose of further postponing the suit proceedings." என்று தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி தீர்ப்பின் படி மனுதாரர் தாக்கல் செய்துள்ள Recall மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் ஆகவே, சமூகம் கோர்ட்டார் அவர்கள் 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள recall மனுவினை கூடுதல் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் என்றும் ஆட்சேபணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**5. ஐ.ஏ.665/2025 மனு ஆட்சேபணையின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனுதாரர்/2ம் வாதி தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் சட்டப்படி இந்த மனு தள்ளுபடி செய்ய அருகதையானதாகும் என்றும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரிகை மற்றும் மனு அம்சங்கள் தாக்கல் செய்துள்ள வகையில் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் இந்த அசல் வழக்கு 2ம் பிரதிவாதி/ராதாகிருஷ்ணன் தாக்கல் செய்துள்ள மனுவில் 1ம் பிரதிவாதி தம்பிதுரை மற்றும் 3 முதல் 10 பிரதிவாதிகளை மனுதாரர்களாக காண்பித்து அசல் வழக்கு 1 முதல் 3 வாதிகளை எதிர்மனுதாரர்கள் ஆக காண்பித்து இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும் ஆனால் 2ம் பிரதிவாதி ராதாகிருஷ்ணன் 6ம் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்யவேண்டுமென்று பரிகாரம் கோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும் இந்த அசல் வழக்கானது ஒரு பாக வழக்காகும் என்றும் தாவா சொத்துக்கள் யாவும்,

அங்கப்பன் - 1, நாராயணன் - 2, தனபால் - 3 ஆகியோர்கள் அடங்கிய இந்து கூட்டு குடும்பத்திற்கு பாத்தியமாகும் என்றும் மேற்படி அசல் வழக்கில் நாராயணன் வாரிசுகளான 1 முதல் 2 வாதிகளும் தனபால் வாரிசுகளான 3ம் வாதியும், சேர்ந்து தங்களுக்கு தாவா சொத்துக்களில் 2/3 பாக உரிமை கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் அதேபோல் அங்கப்பன் வாரிசுகள் தான் தம்பிதுரையும், இந்த மனுதாரர் ராதாகிருஷ்ணனும் இந்த 6 முதல் 9 பிரதிவாதிகளின் தாயார் பாக்கியவதியும் வாரிசுகள் என்ற முறையில் 1/3 பாகத்தினை அடைய உரிமை உடையவர்கள் என்றும் இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டு அதன் பிறகு 1ம் பிரதிவாதி தம்பிதுரை பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆக விசாரிக்கப்பட்டு இந்த வழக்கு 6ம் பிரதிவாதியான மகாதேவன் பிரதிவாதிகள் தரப்பு சாட்சி 2 ஆகவும், விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும் மனுதாரர்/2ம் பிரதிவாதி சாட்சி 1ஐ குறுக்கு விசாரணை ஏதும் செய்யவில்லை என்றும் ஆனால் 6ம் பிரதிவாதியான பி.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும் மேற்படி பி.சா.2 சாட்சி தரப்பில் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் ஒரு பாக வழக்கில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் பாக உரிமை உடையவர்கள் என்றும் அனைவரும் வாதிகளாகவே கருதப்பட வேண்டும் என்பது தான் சட்டம், இந்த மனுதாரர்/2ம் பிரதிவாதி தன் குமாரர் ரகுராமன் அவர்களுக்கு பொதுக்குடும்ப சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படாத நிலையில் தன் குமாரரான ரகுராமன் அவர்களுக்கு 06.01.2014ம் தேதியில் ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்து அவரை தூண்டிவிட்டு மேற்படி ரகுராமன் வாதியாக இருந்து ஒ.எஸ்.304/2014 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும் இந்த வழக்கில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு இரு தரப்பிலும் வாதுரை செய்ய 16.10.2025ம் தேதி 17.10.2025ம் தேதி, 27.10.2025ம் தேதி மற்றும் 28.10.2025 ஆகிய

தேதிகளில் வாய்தா வைக்கப்பட்டிருந்தது என்றும் ஆனால் இந்த மனுதாரர் 28.10.2025ம் தேதியில் தான் பி.சா.2 சாட்சியான இந்த 6ம் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்றும், மேற்படி பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை Reopen செய்ய வேண்டுமென்றும், பி.சா.2 சாட்சியான மகாதேவன் அவர்களை குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று ஒரு Recall மனுவும் தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி 2ம் பிரதிவாதி மனுதாரராக இருந்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல என்று சென்னை உயர்நீதிமன்றம் நீதியரசர் ராஜேஸ்வரன் அவர்கள் 25.03.2009-ம் தேதியிட்ட கீழ்கண்ட R. Kalairasan Vs. 1. M.Lingam and 5 others என்ற வழக்கில் பாரா 16ல் கீழ்கண்டவாறு தீர்ப்பு செய்துள்ளார்கள் என்றும் " When the suit was posted for the arguments of the respondents/defendants, instead of arguing the matters, matter was adjourned on several occasions by filing a number of adjournment petitioners - There was no representation on behalf of the respondents/defendants and therefore the suit was posted for judgment - It was only at time the respondents/defendants suddenly realised that P.W.1 has not been effectively cross examined - This is definitely for the purpose of further postponing the suit proceedings." என்று தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி தீர்ப்பின் படி மனுதாரர் தாக்கல் செய்துள்ள Reopen மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் ஆகவே, சமூகம் கோர்ட்டார் அவர்கள் 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள reopen மனுவினை கூடுதல் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் என்றும் ஆட்சேபணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. இரு தரப்பில் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் விசாரித்து குறியிடப்படவில்லை. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7. தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் :-**

இந்த மனுக்கள் அனுமதிக்கத்தக்கதா அல்லது இல்லையா ?

**8. தீர்வு :-**

மனுதாரர் இந்த மனுவினை அசல் வழக்கு எண்.249/2014 என்ற வழக்கில் 2வது பிரதிவாதி என்றும் 16.10.2025ம் தேதி 6வது பிரதிவாதியான மகாதேவன் என்பவர் அவரது தரப்பில் பி.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றும் அவரை குறுக்கு வசாரணை செய்வதற்காக மேற்சொன்ன தேதியில் வாய்தா வைக்கப்பட்டிருந்ததது என்றும் அன்றைய தினம் மனுதாரரின் வழக்கறிஞர் விருதாச்சலம் I நீதிமன்றத்தில் அரசு சாட்சிகளை விசாரிக்க வேண்டிய இருந்ததால் இந்த நீதிமன்றத்தில் ஆஜராக இயலாமல் போனது என்றும் அதன் காரணமாக மனுதாரர் தரப்பு சாட்சியத்தை முடித்துவைக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் அதனால் 2 மனுக்களை தாக்கல் செய்துள்ளார் என்றும் இந்த மனுவினை IA.624/2025 என்ற மனுவினை 6ம் பிரதிவாதி விசாரணையை மீண்டும் திறப்பு செய்து உத்தரவிடவேண்டியது என்றும் IA.625/2025 தாக்கல் செய்து அதன் வாயிலாக பி.சா.2னை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிடப்பட வேண்டும் என்றும் கூறி இந்த 2 மனுக்களை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. மற்ற எதிர்மனுதாரர்களான வாதி இந்த மனுவில் ஆட்சேபணை தாக்கல் செய்யப்படவில்லை. மாறாக 6வது பிரதிவாதி மட்டுமே இந்த ஐ.ஏ. மனுவில் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளார். அவர் தாக்கல் செய்துள்ள ஆட்சேபணையில் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் திரு.ராதாகிருஷ்ணன் என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில் 1வது பிரதிவாதி தம்பிதுரை மற்றும் 3 முதல் 10 பிரதிவாதிகளை மனுதாரர்களாக காண்பித்து அசல் வழக்கு 1 முதல் 3 வாதிகளை எதிர்மனுதாரர்களாக காண்பித்து இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளனர் என்றும் ஆனால் 2வது பிரதிவாதியான ராதாகிருஷ்ணன் என்பவர் 6வது பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்ற பரிகாரம் கோரியே இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும் அசல் வழக்காகனது பாக பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றும் வழக்கு சொத்துக்கள் முழுவதும் அங்கப்பன், நாராயணன், தனபால் ஆகியோர் அடைய வேண்டிய இந்து கூட்டு குடும்ப பாத்தியமானது என்றும் அசல் வழக்கில் நாராயணன் என்பவர் வாரிசுகள் 1 மற்றும் 2 வாதிகள் என்றும் தனபால் என்பவர் வாரிசானவர் 3வது வாதியாகவும் சேர்ந்து அவர்களுக்கு தாவா சொத்துக்கள் 3ல் 2 பாகம் உரிமை கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளனர் என்றும் அதனை அங்கப்பன் வாரிசுகள் தான் தம்பிதுரையும் இந்த மனுதாரரான ராதாகிருஷ்ணன் மற்றும் 6 முதல் 9 பிரதிவாதிகளின் தாயார் பாக்கியதியும் வாரிசுகள் என்ற முறையில் 3ல் 1 பாகம் அடைய உரிமை உடையவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டு அதன் பின்னர் 1வது பிரதிவாதியான தம்பிதுரை என்பவர் தரப்பில் பி.சா.1 விசாரணை செய்யபபட்டுள்ளார். 6வது பிரதிவாதியான மகாதேவன் என்பவர் பிரதிவாதிகள் தரப்பில் 2வது சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றும் மனுதாரர் பி.சா.1னை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும் பி.சா.2 ஆன 6ம் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும் ஒரு பாக

வழக்கில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் பாக உரிமை உடையவர்கள் ஆனவரும் வாதிகளாகவும் கருதப்படவேண்டும் என்பது சட்டம் என்றும் 2வது பிரதிவாதி அவரது மகன் ராகுராமன் அவர்களுக்கு பொது குடும்ப சொத்துக்களில் பாகம் பிரியாத நிலையில் 06.01.2014ம தேதி ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்து அவரை தூண்டி விட்டு மேற்படி ரகுராமன் என்வர் வாதியாக இருந்து அசல் வழக்கு எண்.304/2014 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும் அந்த வழக்கில் இரு தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு 2 தரப்பிலும் வாதுரை செய்ய வாய்தா தேதிகள் வைக்கப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் 28.10.2025ம் தேதியில் பி.சா.2 சாட்சியான இந்த 6ம் பிரதிவாதி குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்றும் மேற்படி பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியத்தை திறப்பு செய்ய வேண்டும் என்றும் பி.சா.2 சாட்சியான மகாதேவன் என்பவரை குறுக்கு விசாரணை செய்யவேண்டும் என்று ஒரு மனு தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி மனுக்களை நிலைக்கத்தக்கதல்ல எனறும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தீர்ப்பினை தாக்கல் செய்துள்ளார் என்றும் அந்த தீர்ப்பின் படி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுக்கள் நிலைக்கத்தக்கதல்ல என்றும் எனவே மேற்படி மனுக்களை கூடுதல் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

10. இரு தரப்பு வாதுரைகளை கேட்ட பின்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டது. 6ம் எதிர்மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் மனுதாரர் இந்த மனுவில் வாதி, பிரதிவாதிகளை உரிய முறையில் வரிசைப்படுத்தி எதிர்மனுதாரர்களாக குறிப்பிடப்படவில்லை. அனைத்து பிரதிவாதிகளையும் மனுதாரர்கள் என்றும் வாதிகளை எதிர்மனுதாரர்கள் என்றும் காண்பித்து இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். ஆனால் இந்த மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி என்றும் இந்த மனுவில் மனுதாரர் என்று குறிப்பிட்டு இதர

பிரதிவாதிகளை எதிர்மனுதாரர்களாக தலைப்பில் காண்பித்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு மனுதாரர் இந்த மனுவினை உரிய முறையில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் கூறியுள்ளது போல் அசல் வழக்கு எண்.249/2014 மற்றும் அசல் வழக்கு எண்.341/2015, அசல் வழக்கு எண்.304/2014 என்ற 3 வழக்குகளையும் ஒருசேர விசாரணை செய்யப்படவேண்டும் என்று ஏற்கனவே மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டு அதன் பேரில் அசல் வழக்கு எண்.304/2014 என்ற வழக்கானது வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வாதுரைக்காக வைக்கப்பட்டுள்ளது மற்ற 2 அசல் வழக்குகள் 249/2014 மற்றும் 341/2015 ஆகிய 2 வழக்குகளில் ஒருசேர விசாரணை செய்யப்பட்டு அதன் பேரில் இந்த மனுவில் 7வது எதிர்மனுதாரர், அசல் வழக்கில் 6வது பிரதிவாதி பி.சா.2 ஆக 15.10.2025 தேதியில் விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது தரப்பில் எந்தவித ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

11. வாதி மற்றும் பிரதிவாதிகளின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணைக்காக 16.10.2025ம் தேதிகரு ஒத்தி வைக்கப்பட்டது. பி.சா.2 நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தார். மேலும் 2 மற்றும் 10 பிரதிவாதிகளின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தார். அவரது தரப்பில் குறுக்கு விாசரணை செய்ய முன் வராத காரணத்தினாலும் வாதியானவர் பி.சா.2னை குறுக்கு விசாரணை செய்ய தயாராக இருந்த காரணத்தினாலும் மேற்படி வழக்கானது 10 வருட காலமாக நிலையில் உள்ளது என்ற விவரத்தினையும் வாதி பி.சா.2னை குறுக்கு விசாரணை செய்ய தயாராக உள்ளார் என்று விளக்கி சொல்லிய பின்பும் 2 மற்றும் 10 பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.2யை குறுக்கு விசாரணை செய்ய முன் வராத காரணத்தினால் 2 மற்றும் 10 பிரதிவாதி தரப்பில் பி.சா.2ன் குறுக்கு விசாரணை சாட்சியம் முடிக்கப்பட்டு பி.சா.2னை

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. மேற்படி குறுக்கு விசாரணை சாட்சியத்தை 6 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் 6 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் அவர்களது சாட்சியத்தை முடித்துக்கொள்வதாக கூறியதின் பேரில் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. 2வது பிரதிவாதி, பி.சா.2னை அதாவது அசல் வழக்கில் 6வது பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்குமாறு கோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு அனுமதிக்கப்படுவதால் வாதிகள் தரப்பிலும் இதர எதிர்மனுதாரர்கள் தரப்பிலும் மிகுந்த பாதிப்புகள் ஏற்படும். மேலும் வாதிகள் தரப்பில் 6வது பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்து முடித்த பிறகு மீண்டும் 2வது பிரதிவாதி 6வது பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிப்பது வாதி தரப்பில் செய்துள்ள குறுக்கு விசாரணையை முறியடிக்கும் வண்ணம் அமையும் என்பதாலும் 2 மற்றும் 10வது பிரதிவாதிகளுக்கு ஏற்படும் இழப்பை காட்டிலும் வாதி மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு பெருத்த இழப்பு ஏற்படும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

12. மனுதாரர் அவரது மனுவில் 6வது பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்யவேண்டிய தினத்தில் மனுதாரர் வழக்கறிஞர் விருதாச்சலம் நீதிமன்றத்திற்கு அரசு சாட்சிகளை விசாரிக்க வேண்டி இருந்ததால் இந்நீதிமன்றத்தில் ஆஜராக இயலாமல் போனது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்யும்போது அன்றைய தினம் 2 மற்றும் 10 பிரதிவாதிகளின் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தார் என்றும் அவர் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை என்பதும் தெரியவருகின்றது. எனவே மனுதாரர் குறிப்பிட்டுள்ள காரணம் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**IA.624/2025**

**முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**IA.625/2025**

**முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 11.11.2025 இன்று பகரப்பட்டது.

M S VARALAKSHMI
Digitally signed by M S VARALAKSHMI

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**இணைப்பு :-**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை)

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

(இல்லை.)

M S VARALAKSHMI
Digitally signed by M S VARALAKSHMI

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.